**செய்தி வெளியீடு எண்: 581** **நாள் : 16.11.2014**

## இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2014 "தமிழ்நாடு நாள் விழாவை" இன்று (16.11.2014) மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

---

புதுடெல்லியில் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2014 "தமிழ்நாடு நாள் விழாவை" இன்று (16.11.2014) மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. 34–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2014, நவம்பர் 14ஆம் தேதி தொடங்கப்பட்டு, வரும் 27ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இப்பொருட்காட்சியில் 26 மாநிலங்கள், 4 இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 25 வெளிநாடுகள் பங்கேற்றுள்ளன.

தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உயர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழை எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தியதன் மூலம் மக்கள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டங்களை பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகைதரும் மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரங்கு சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "மகளிர் தொழில் முனைவோர்" (Women Entrepreneurs) என்பதாகும். இதன் அடிப்படையில், இப்பொருட்காட்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள அளப்பரிய வளர்ச்சி குறித்து, ஆக்கப்பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களின் நலனுக்காக தந்த சிறப்புத் திட்டங்களான விலையில்லா அரிசி, விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும்

திட்டம், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம், மேலும், மாணவ மாணவியருக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டம், பசுமை வீடுகள் மற்றும் அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம் போன்ற திட்டங்கள் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரங்கில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தொழில் மற்றும் வணிகத் துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம், வேளாண்மைத் துறை, தமிழ்நாடு மாநில வேளாண்மை வணிக வாரியம், தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கைவினை மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஆகிய 12 அரசுத் துறைகள் பங்கேற்று தங்கள் துறையின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் மாடல்கள் சிறப்பான முறையில் நேரடிக் காட்சியாக பொதுமக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர்.

இவ்வரங்குகளில், அரசின் சாதனை விளக்கப் படக்காட்சிகள் தொடர்ந்து ஒளிப்பரப்பட்டு வருகின்றது. மேலும், அரங்கிற்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கு அரங்கில் இடம்பெற்றுள்ள துறைகளின் சாதனைகள் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை கொண்டாடி வருகின்றனர். அவ்வகையில் “தமிழ்நாடு நாள்” விழா இன்று (16.11.2014) பிரகதி மைதானத்தில் உள்ள லால் சௌக் கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்கள். புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இணை இயக்குநர் (பொருட்காட்சி) திரு. கு. தாணப்பா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

இவ்விழாவில், டெல்லியைச் சார்ந்த மேரி இளங்கோவன் இசை மற்றும் நடன மையக் குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும், மதுரையைச் சார்ந்த தமிழ்நாடு கிராமியக் கலைகள்வளர்ச்சி மையக் குழுவினரின் கிராமியக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

முன்னதாக, அரங்கினை தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநி திரு.எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள், டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பீர்சிங் பஜாஜ், இ.ஆ.ப., அவர்கள் கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு.எஸ்.பி. எழிலழகன்அவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**